05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

# தமிழ் மொழியும் இலக்கியமும்

ZOOM ONLINE CLASS

## தரம் 09

Tute 02

## உண்மைக்குப் பரிசு



தமிழ் ஆசான் "அகரம் தினேஸ்"

SLTS, BA (honours) IN TAMIL DIP IN G/D & ARTIFICIAL INTERLLIGENCE

# உண்மைக்குப் பரிசு

## பகுதி - I

**(01) பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. பின்வருவனவற்றில் ஆக்கப்பெயராக அமைவது,

| | |
|---|---|
| 1. பாடசாலை | 3. புகைவண்டி |
| 2. அதிட்டசாலி | 4. எறிகணை |

2. பெயர் அல்லது வினையுடன் விகுதி சேர்த்து உருவாக்கப்படும் பெயர்ச்சொல்............................ எனப்படும்.

| | |
|---|---|
| 1. வேற்றுமை | 3. ஆக்கப்பெயர் |
| 2. கூட்டுப்பெயர் | 4. வினைமுற்று |

3. கூட்டுப் பெயருக்கு உதாரணமாக அமைந்த சொல்.

| | |
|---|---|
| 1. வானவில் | 3. விருந்தாளி |
| 2. முதலாளி | 4. காட்சி |

4. பெயரும் பெயரும் இணைந்து உருவாகிய கூட்டுப்பெயர்.

| | |
|---|---|
| 1. குதிரைவண்டி | 3. காட்சி |
| 2. எழுதுகோல் | 4. பயிற்சி |

5. முகுந்தன் முல்லைச்சரம் சூடி வந்தான். இதில் முல்லைச்சரம் என்பது,

1. பெயரும் பெயரும் இணைந்த கூட்டுப்பெயர்.
2. ஆக்கப்பெயர்.
3. வினைச்சொற்கள் இணைந்த பெயராகும்.
4. பெயரும் வினையும் இணைந்த சொல்லாகும்.

AGARAM DHINES

**(02) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

6. கவியரசு கண்ணதாசனின் பாடல்கள் நிகரற்றவை. இங்கே நிகர் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்,

1. நிகழ்ச்சி
2. ஒப்புமை
3. புகழ்
4. உறுதி

7. தன்னம்பிக்கை இல்லாதவன் வாழ்வில் முன்னேறுதல் இயலாது. தன்னம்பிக்கை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்,

1. சுய நம்பிக்கை
2. பெரு நம்பிக்கை
3. அவ நம்பிக்கை
4. கோழை

8. மேம்பட்ட எண்ணங்களைத் தேர்ந்தெடுப்பவர்கள் வாழ்க்கையின் வெற்றிப் பட்டியலில் இடம்பெறுவர். மேம்பட்ட என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.

1. உயர்மட்ட
2. கீழ்மட்ட
3. பெருமட்ட
4. சிறுமட்ட

9. பாலில் நீர் கலக்கக் கூடாதென்று கலீபா கண்டிப்பான கட்டளை இட்டிருக்கிறார். கட்டளை என்பதன் ஒத்த கருத்துச் சொல்,

1. பணி
2. ஆணை
3. கண்டிப்பு
4. அனுமதி

10. "நமது செயல்களுக்கு அல்லாஹ் நிச்சயம் கூலி தருவான்" என்று நீங்கள் தானே கூறுவீர்கள்" - இங்கே கூலி என்பதன் பொருள்,

1. வெகுமானம்
2. பரிசு
3. சம்பளம்
4. தண்டனை

**(03) பலபொருள் குறிக்கும் ஒரு சொல் தருக.**

11. காவல், வாசனை, சிறப்பு, களிப்பு, அச்சம்.........................................................

12. அம்பு, முகில், தளிர், எலுமிச்சை, மூங்கில்.....................................................

13. வேதம், சுதி,இசை,காது...............................................................................

14. இயல், இசை, நாடகம்...............................................................................

15. அறைதல், ஒலியெழுப்புதல், காற்றுவீசுதல், அச்சிடல்.........................................

16. போர். சண்டை, அமர், மல்யுத்தம்,குவியல்,சாணி, மரப்பொந்து.................................

17. வெகுமானம், நன்கொடை, பரிசுப்பொருள், உயரிய மதிப்பு.....................................

AGARAM DHINES

18. அறிவு, கல்வி, பூமி, தத்துவநூல், பயிற்சி, அனைத்தும் அறிந்தநிலை……………………

19. சிங்கம்,கோளரி, அரி…………………………………………………………………….

20. வயல், பழனம், செறு, மருதநிலம், வெளி…………………………………………….

**(04) சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

21. கலீபா உமர்(றழி) மாறுவேடத்தில் சென்றபோது தாயும் மகளும் உரையாடியதைச் செவிமடுத்தார். இவ்வாக்கியத்தின் எழுவாய்,

1. கலீபா
2. தாயும்மகளும்
3. உரையாடல்
4. செவிமடுத்தல்

22. நாரைகள் ஆகாயத்தில் பறக்கும் சத்தம் கேட்டது. இதில் நாரைகள்

1. அஃறிணை ஒன்றன்பால்.
2. அஃறிணை பலவின்பால்.
3. அஃறிணை ஒன்றன்பால் ஒருமை.
4. அஃறிணை ஒன்றன்பால் இருமை.

23. அவன் தினந்தோறும் காலை எழுந்ததும் பத்திரிகை படிப்பான். இதில் அவன் என்பது,

1. முன்னிலை ஒருமை
2. முன்னிலை படர்க்கை
3. தன்மை ஒருமை
4. படர்க்கை ஒருமை

24. தசரதன் ஆட்சியை மக்கள் பெரிதும் போற்றினர். இதில் மக்கள் என்பது,

1. உயர்திணை, ஆண்பால், ஒருமை 2. உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை

3. உயர்திணை, பலர்பால், பன்மை,படர்க்கை 4. உயர்திணை, பலர்பால், தன்மை, ஒருமை

25. நீங்கள் எப்போது வந்தீர்கள்? நீங்கள் என்பது.

1. தன்மை
2. முன்னிலைப் பன்மை
3. படர்க்கைப் பன்மை
4. தன்மைப் பன்மை

**(05) பொருத்தமான அடுக்குத்தொடர்களைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புங்கள்.**

26. கோமாளியின் கூத்தைப் பார்த்து சிறுவர்கள்………………………………சிரித்தார்கள்.

27. தவளைகள் தரையில்………………………….. சென்றன.

28. இணையத்தில் தினமும்………………………… செய்திகளை அறிவோம்.

29. பாலன் பரீட்சையில்…………………….. எழுதித் தள்ளினான்.

30. சுடர்ஒளி ……………………..செய்திகளை வெளியிடுகிறது.





AGARAM DHINES

| | | | | |
|---|---|---|---|---|
| சுடச்சுட | விழுந்துவிழுந்து | புதுப்புது | தத்தித்தத்தி | பக்கம்பக்கமாக |

**(06) மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்யுங்கள்.**

31. மகள் கூறியதைக்கேட்டுத் தாய் உச்சிகுளிரந்தாள். உச்சிகுளிர்தல் என்றால்.

1. குளிர் அதிகரித்தல்
2. துக்கம் பெருகுதல்
3. மகிழ்ச்சி மிகுதல்
4. உச்சி கொதித்தல்

32. கையூட்டுப் பெற்றமைக்காக காவலர் ஒருவர் பதவி இழந்தார். கையூட்டு என்றால்,

1. கையுறை
2. இலஞ்சம்
3 .களவு
4. கைப்பிடி

33. பறவையில் இளையது பார்ப்பு என்பது போலக் கீரியில் இளையது,

1. பறழ்
2. குஞ்சு
3. பிள்ளை
4. குருளை

34. உப்பு கரிக்கும் என்பது போல வானம்,

1. இடிக்கும்
2. மின்னும்
3. வெடிக்கும்
4. குமுறும்

35. "வானாகி நின்றானை என் சொல்லி வாழ்த்துவனே!" வானாகி என்பதன் எதிர்ச்சொல்,

1. விண்ணாகி
2. மண்ணாகி
3. ஊனாகி
4. ஒளியாகி

**(07) பின்வருவன சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் எழுதுக.**

36. சொற்களுக்கிடையில் உவமை உருபு மறைந்து வருவது உவமைத் தொடர் எனப்படும்.( )

37. உருபு வெளிப்படையாக நிற்பது வேற்றுமைத்தொகை எனப்படும்.( )

38. வேற்றுமைத்தொகைகள் ஆறு வகைப்படும்.( )

39. சொற்களுக்கிடையில் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்து வருவது வேற்றுமையாகும்.( )

40. மலையுச்சி என்னும் தொடரில் மறைந்து நிற்கும் வேற்றுமை உருபு "அது" ஆகும். ( )

**பகுதி II**

AGARAM DHINES

**(01) பின்வரும் பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அ) இரண்டாம் கலீபா உமர்(றழி) அவர்களிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

ஆ) அவர் அடிக்கடி கூறிக்கொள்வது என்ன?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

இ) இரவு நேரங்களில் மாறு வேடம் பூண்டு அவர் நகரைச் சுற்றுவது ஏன்?

……………………………………………………………………………………………

ஈ) தாய் மகளிடம் கூறியது என்ன?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

உ) பாலில் தண்ணீரைக்கலக்குமாறு கூறிய தாய்க்கு மகள் கூறிய பதில் என்ன?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

ஊ) மகளின் பண்புகள் என எவற்றைக் கலீபா கூறுகிறார்?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

AGARAM DHINES

எ) உண்மை பேசிய மகளுக்கு கலீபா கொடுத்த சன்மானம் என்ன?

……………………………………………………………………………………………

ஏ) கலீபாஉமர்(றழி) சிறந்த தலைவர் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டு தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

ஐ) இப்பாடத்தைப் படித்ததன் மூலம் நீங்கள் உணர்ந்துகொள்ளும் விழுமியக் கருத்துக்கள் எவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

**(02) விடை தருக.**

1. பந்தி எனப்படுவது யாது?

……………………………………………………………………………………………………..

2. பந்தி ஒன்றை எழுதுவதற்குமுன் செய்ய வேண்டியன யாவை?

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

3. சிறந்த பந்தி ஒன்று எத்தகைய பண்புகளைக் கொண்டிருக்கும்?

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

4. பந்தி எழுதும் படிமுறைகள் சில தருக.

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

5. பந்தியை விரித்து வளர்ப்பதற்கான வழிகள் சில எழுதுக.

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

6. பந்தி எழுதும்போது தவிர்க்க வேண்டிய விடயங்கள் எவை?

………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………

AGARAM DHINES

**(03) பின்வருவனவற்றுக்குச் சந்தர்ப்பம் கூறி விளக்குக.**

அ) “தாயே! பாலில் தண்ணீரைக் கலப்பது குற்றமல்லவா? பாலில் நீர் கலக்கக் கூடாதென்று கலீபா அவர்கள் கண்டிப்பான கட்டளை இட்டிருக்கிறாரல்லவா? குற்றமான ஒரு காரியத்தை நாம் செய்யலாமா?”

1. யாரால் கூறப்பட்டது?……………………………………………………………………
2. யாருக்குக் கூறப்பட்டது?…………………………………………………………………
3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?…………………………………………………………

ஆ) “அல்லாஹ்வுக்கு மாறான செயலை நான் செய்யமாட்டேன். நமது செயலுக்கு அல்லாஹ் நிச்சயம் கூலி தருவான்”

1. யாரால் கூறப்பட்டது?……………………………………………………………………

2. யாருக்குக் கூறப்பட்டது?...........................................................................................................

3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?...................................................................................................

இ) "மகனே, இந்தப் பெண் சிறந்த பண்பும் ஒழுக்கமும் உள்ளவள். அல்லாஹ்வின் மீது அதிக பக்தி உள்ளவள். பொய் சொல்லமாட்டாள் ஆனால் ஏழை. இப் பெண்ணை நீ மனைவி ஆக்கிக் கொள்ள விரும்புகிறாயா?"

1. யாரால் கூறப்பட்டது?.............................................................................................................

2. யாருக்குக் கூறப்பட்டது?...........................................................................................................

3. எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?...................................................................................................

**(04) பின்வருவனவற்றை ஒரு சொல்லால் குறிப்பிடுக.**

1. ஒரு நூலை வெளியிடுவோர் எழுதும் உரை......................................................

2. நாடகம், நாட்டியம்,நூல் முதவியவற்றைப் பலரும் அறியும்படி செய்தல்..........................

3. நகையும் பரிகாசமும் பொருந்தக் கவிபுனையும் ஆற்றல் படைத்தவன்.............................

4. மருத்துவனின்றி தாமே செய்து கொடுப்பது.....................................................

5. மெய், வாய், கண், செவி, மூக்கு என்னும் ஐந்து உறுப்புக்கள்.................................

6. சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்..................................

7. பொது மக்களுக்காக அரங்கிலே ஆடப்படும் கூத்து..........................................

**(05) சரியான விடையின் கீழ்க் கோடிடுங்கள்.**

1. நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் நான்கு பொருள்களை உணர்த்துவது,

1. நான்காம் வேற்றுமை
2. ஐந்தாம் வேற்றுமை
3. ஆறாம் வேற்றுமை
4. ஏழாம் வேற்றுமை.

2. பாலின் வெண்மையது இவ்வாடை. வேற்றுமை உருபு சுட்டும் பொருள். இதில் வந்துள்ள ஐந்தாம் வேற்றுமை சுட்டும் பொருள்.

1. நீங்கல்
2. எல்லை
3. ஒப்பு
4. ஏது

3. கொழும்பின் தெற்கு தெகிவளை. இதில் வந்துள்ள வேற்றுமை உருபும் உணர்த்தும் பொருளும்,

1. உருபு : இல், பொருள் : எல்லை

2. உருபு : இன், பொருள் : எல்லை

ACARAM DHINES

3. உருபு : கு, பொருள் : நீங்கல்

4. உருபு : இன், பொருள் : ஏது

4. ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வராத வாக்கியம்.

1. ஊரில் நீங்கினான்.

2. கண்ணன் கொடையில் சிறந்தவன்.

3. தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை

4. பாலில் வெண்ணெய் உண்டு

5. ஆறாம் வேற்றுமை சொல்லுருபு கொண்ட வாக்கியம்.

1. பேனா கொண்டு எழுதினான்

2. மேசையின் கீழ்க்கிடந்த பென்சில்

3. கூலியின் பொருட்டு வேலை செய்தான்

4. என்னுடைய வீடு இது.

**(06) ஒழுங்கற்றுக் காணப்படும் வாக்கியங்களை பொருள் தரக்கூடிய பந்தியாக ஒழுங்குபடுத்துக.**

அ) காடழிப்பு இவ்வியக்கச் சமநிலையைச் சீரழித்து விடுகிறது.

ஆ) இயற்கைக் காடு, பூமி உயிரினத்துக்களித்த ஒரு சூழல் தொகுதியாகும்.

இ) அங்கு பல்வேறு உயிரினங்கள் இயக்கச் சமநிலையில் வாழ்கின்றன.

ஈ) அதனால் சில உயிரினங்கள் இயற்கைக் கட்டுப்பாடுகளை மீறி விரைவாகப் பெருகுகின்றன.

உ) இச்சூழல் தொகுதி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக உருவாகியது.

ஊ) அதனால் சில உயிரினங்கள் அழிந்து போகின்றன.

(முதல் வாக்கியம். இயற்கைக்காடு....)

**(07) பின் வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. கடற்கரையில் ஒரு மாலைவேளை,

2. நான் பார்த்த தேர்த்திருவிழா,

3. சூழல் மாசுபடும் முறையும் அதைத் தடுக்கும் வழியும்.

4 எனக்குப் பறக்கும் ஆற்றல் கிடைத்தால்.

**செயற்பாடு :**

**பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 50 சொற்களுக்குக் குறையாமல் ஒரு பந்தி எழுதுக.**

அ) தொலைக்காட்சியினால் ஏற்படும் தீமைகள்.

ஆ) செய்யும் தொழிலே தெய்வம்

இ) மரங்களை வளர்ப்பது ஏன் அவசியமானது?

**நினைவிற் கொள்க :**

- ஒருபொருள் குறித்து பல வசனங்கள் அமைவது ஒரு பந்தியாகும்.
- ஒரு பந்தி குறிப்பிட்ட ஒரு மையக் கருத்தினைக் கொண்டு அமைந்திருக்கும்.
- பந்தியின் மையக்கருத்தினைக் கூறும் வாக்கியம் தலைமை வாக்கியம

## ஒரு பொருள் - பல் சொற்கள்

1. அகிம்சை - இன்னல் செய்யாமை, துன்புத்தாமை
2. அடி - கால், தாள், பாதம்
3. அபாயம் - ஆபத்து, இடர், இடையூறு
4. அந்திப்பொழுது - மாலை, சாயங்காலம், சாய்பொழுது, செக்கல்
5. அரசன - கோ, மன்னன், தலைவன், ராஜா, வேந்தன:, புரவலன்
6. அழகு - எழில், வனப்பு, வடிவு, கவின், சிங்காரம், சுந்தரம், வண்ணம்,
7. அறிவு -ஞானம்,புத்தி, ஞாபகம், விவேகம், உணர்வு
8. அறிவாளி - புத்திசாலி, மேதை, அறிஞன், மேதாவி, சான்றோன், படித்
9. அறிவுரை - புத்திமதி, ஆலோசனை, உபதேசம:, நல்லுரை,
10. ஆற்றல் - திறமை, சக்தி, வலிமை, இயக்கம், திண்மை, உரம்,

AGARAM DHINES